வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,

ந.க.எண். 979/அ1/2023 நாள் : 28.02.2023

------

பொருள் : தமிழ்நாடு அமைச்சுப்பணி – பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – 15.03.2023 நிலவரப்படியான உதவியாளர் / சுருக்கெழுத்து தட்டச்சர் பதவியிலிருந்து பதவி உயர்வு – தகுதிவாய்ந்தோர் பெயர்ப்பட்டியல் – தயார் செய்தல் – விவரங்கள் அனுப்பக்கோருதல் – சார்பு.

பார்வை : சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள், ந.க.எண்.10030/அ3/இ1/ 2023, நாள். 27.02.2023

-----

பார்வையில் காணும் செயல்முறைகளின் படி, வேலூர் மாவட்டத்தில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்களில் 15.03.2023 நிலவரப்படி உதவியாளர் / சுருக்கெழுத்து தட்டச்சர் பதவியிலிருந்து பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் பதவி உயர்வு வழங்குவதற்கான தேர்ந்தோர் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பொருட்டு, கீழ்கண்டவாறு கருத்துருக்கள் கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | உதவியாளர் / சுருக்கெழுத்து தட்டச்சர் பதவியிலிருந்து பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் பதவி உயர்வு | 15.03.2012 மற்றும் 15.03.2014 நிலவரப்படியான உதவியாளர்/ சுருக்கெழுத்து தட்டச்சர் தேர்ந்தோர் பட்டியலில் இடம் பெற்று உதவியாளராகப் பதவி உயர்வு பெற்று பணியில் சேர்ந்தவர்கள் சார்பாக விவரம் அளிக்கப்பட வேண்டும். |

மேற்கண்டவாறு கருத்துரு அனுப்பும்போது கீழ்கண்ட விவரங்களை உள்ளடக்கி அனுப்பப்பட வேண்டும்

1. ஒழுங்கு நடவடிக்கை / தண்டனைக் காலம் (Currency of Punishment Period) முடிந்து 15.03.2023 தேர்ந்தோர் பட்டியலில் இடம்பெறத் தகுதியானவர்களின் விவரங்களை (ஒழுங்கு நடவடிக்கை ஆணை நகல்) முழுமையான வகையில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
2. உதவியாளர் / சுருக்கெழுத்து தட்டச்சர் பதவி உயர்வினை மூன்றாண்டுகளுக்குத் தற்காலிகமாக உரிமைவிடல் செய்து மூன்றாண்டு காலம் முடித்து 15.03.2023 நிலவரப்படியான பட்டியலில் இடம்பெறத் தகுதியிருப்பின் அன்னாரது பணி விவரங்களுடன் (பதவி உயர்வு கோரும் படிவத்தில்) இவ்வியக்ககத்திலிருந்து வழங்கப்பட்ட உரிமைவிடல் ஆணை நகலுடன் விண்ணப்பிக்க வேண்டும்.
3. உதவியாளர் பதவியில் முன்தேதியிட்டு பணிவரன்முறை பெற்றுள்ளவர்கள் 15.03.2023 நிலவரப்படியான பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் பதவி உயர்வுக்குத் தகுதி இருப்பின் அப்பணியாளர்களது கருத்துருக்களையும் முன்தேதியிட்ட பணிவரன்முறை ஆணை நகலுடன் விண்ணப்பிக்க வேண்டும்.
4. முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்பட்டவர்களின் சார்பாக அதற்கான ஆணை மற்றும் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் ஆகியவைகளுக்கான ஆதார நகல் இணைக்கப்பட வேண்டும்.

சென்ற ஆண்டு தகுதியிருந்தும் கருத்துரு அனுப்பப்படாமல் காலம் தாழ்த்தியவர்கள் சார்ந்து அனைவரையும் கண்டறிந்து மாவட்டத்தில் எவரது பெயரும் விடுபடாமல் கருத்துரு அனுப்பப்பட வேண்டும்.

மேலும் சில பணியாளர்கள் உதவியாளர் பணிநிலையில் தேர்வுநிலை பெறும் பொருட்டு கருத்துரு அனுப்பப்படாமல் தவிர்க்கும் நிலை எழுந்தால் அவர்களது

பதவி உயர்வு வருங்காலங்களில் பரிசீலிக்க ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மேலும், அவர்கள் மீது துறை ரீதியாக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தேர்ந்தோர் பெயர்ப்பட்டியலில் இடம்பெறத் தகுதியுடைய நபர்களது கருத்துருக்களை அனுப்பாமல் இருப்பின் அதற்கு அப்பிரிவினை கையாளும் உதவியாளர் / கண்காணிப்பாளர் / சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் பள்ளித் தலைமை ஆசிரியரே முழுபொறுப்பேற்க நேரிடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இச்செயல்முறைகள் கிடைக்கப் பெற்றமைக்கு ஒப்புதல் அளிக்குமாறும், கருத்துருக்களை velloreceo@gmail.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பிவிட்டு அதன் இரு நகல்கள் 06.03.2023 அன்று மாலை 04.00 மணிக்குள் இவ்வலுவலகத்தில் தனி நபர் மூலம் சமர்ப்பிக்குமாறு சார்ந்த ஆய்வு அலுவலர்கள் மற்றும் சார்ந்த அரசு /நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு : 1. படிவம் –(1,2)
2.அட்டவனை (1,2)

28/2/23

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

28/2/2023

பெறுநர்

1. கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் ஒருங்கிணைந்தப் பள்ளிக் கல்வி காந்தி நகர், காட்பாடி, வேலூர்.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலைக்கல்வி / தொடக்கக்கல்வி/ தனியார் பள்ளி)
3. அரசு / நகராட்சி உயர் / மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள் வே.மா.,

நகல்:- அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள் வே.மா., (தொடர் நடவடிக்கைக்காக)